தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14-11-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடை காலங்களில் உருளைக்கிழங்கு விலை நிலையாக இருக்கும்

மனித நுகர்வின் அடிப்படையில் அரிசி மற்றும் கோதுமைக்கு அடுத்தப்படியாக மூன்றாவது முக்கிய உணவு பயிராக உருளைக்கிழங்கு உள்ளது. உலகம் முழுவதிலும் ஏறத்தாழ நூறு கோடிக்கும் அதிகமான மக்கள் உருளைக்கிழங்கை உணவாக பயன்படுத்துகின்றனர். 2013-14ல் உலக மொத்த உருளைக்கிழங்கு உற்பத்தி 350 மில்லியன் டன்களுக்கும் அதிகமாக உள்ளது. இதில் சீனா (89 மில்லியன் டன்கள்), இந்தியா (46 மில்லியன் டன்கள்) மற்றும் அமெரிக்கா (42 மில்லியன் டன்கள்) முதல் மூன்று அதிக உற்பத்தியாளர்களாக உள்ளது.

2013-14ல் இந்தியாவின் உருளைக்கிழங்கு உற்பத்தி 46.39 மில்லியன் டன்களாகும். மேலும், உத்திர பிரதேசம் (32%), மேற்கு வங்காளம் (26%), பீகார் (14%), மத்திய பிரதேசம் (15%), குஜராத் (5%) மற்றும் பஞ்சாப் (5%) ஆகிய மாநிலங்கள் சேர்ந்து மொத்த உற்பத்தியில் 87 சதவீதத்தை கொண்டுள்ளன.

வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (APEDA) கொடுத்த புள்ளி விவரங்களின் படி, 2013-14ம் ஆண்டில் இந்திய உருளைக்கிழங்கு ஏற்றுமதி 17.34 இலட்சம் டன்களாகும். இது 2012-13ம் ஆண்டு ஏற்றுமதியை விட ஆறு சதவீதம் அதிகமாகும். செனிகல் (39%), எகிப்து (24%), இலங்கை (22%), நேபாளம் (10%) மற்றும் மியான்மர் (3%) ஆகிய நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து அதிகளவு உருளைக்கிழங்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

2013-14ல் தமிழ்நாட்டில் 5350 எக்டரில் பயிரிடப்பட்டு 1.15 இலட்சம் டன்கள் உருளைக் கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் நீலகிரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களின் மலைப் பிரதேசப் பகுதிகளில் உருளைக் கிழங்கு பயிரிடப்படுகிறது. நீலகிரி மாவட்ட பகுதிகளில், செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் பயிரிட்ட கடைபோக

உருளைக்கிழங்கு நவம்பர் முதல் வாரங்களில் அறுவடையாகி சந்தைக்கு வந்து கொண்டு இருக்கிறது. வர்த்தக மூலங்களின் ஆய்வின் படி தற்போது அறுவடையாகி வரும் உருளைக்கிழங்கின் விலை அடுத்த இரண்டு மாதங்களுக்கு நிலையாக இருக்குமென தெரிய வருகிறது.

மேலும், டிசம்பர் மாத இறுதியில் டில்லி, கொல்கத்தா மற்றும் குஜராத் மாநிலங்களிலிருந்து வரத்துக்கள் வருமென எதிர்பார்ப்பதால் விலை குறையவும் வாய்ப்பு உள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் (NCMS) கடந்த 23 வருடங்களாக நிலவிய உருளைக்கிழங்கு விலையை ஆய்வு செய்தது. ஆய்வு முடிவுகளின்படி விவசாயிகளுக்கு நல்ல தரமான உருளைக் கிழங்கிற்கு நவம்பர், டிசம்பர் மாதங்களில் கிலோவிற்கு ரூ.28 முதல் ரூ.30 வரை விலை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் அறுவடை செய்த உருளைக்கிழங்கை உடனே விற்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641003.
தொலைபேசி: 0422-2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

பேராசிரியர் மற்றும் தலைவர்
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்
விஜயநகரம்,
உதகமண்டலம் - 643001.
தொலைபேசி: 0423-2442170

மக்கள் தொடர்பு அலுவலர்